## ஒக்கியம் துரைப்பாக்கம் குடிநீர் அபிவிருத்தி திட்டம்

- ஒக்கியம் துரைப்பாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம், முன்னதாக 2012–13 ஆம் ஆண்டு நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளுக்கான மதிப்பீடு 2019–20 விலைப்பட்டியலின் படி ரூ.45.99 கோடிக்கு தயாரிக்கப்பட்டது. தற்பொழுது இப்பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு 2 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**பணிகளின் விவரங்கள்**

- **சிப்பம்–1**
  - 16764 மீ. நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள்.
  - 4700 மீ. நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கும் பணிகள்.
  - 6948 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள்
- **சிப்பம்–2**
  - மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமையும் இடங்கள்:
    கங்கை அம்மன் கோயில் தெரு – 16 இலட்சம் லிட்டர்
    (டாக்டர் அம்பேத்கர் பூங்கா)
    செக்ரடரியேட் காலனி – 50 இலட்சம் லிட்டர்
  - கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி அமையும் இடம்:
    செக்ரடரியேட் காலனி – 8 இலட்சம் லிட்டர்

- **ஒப்பந்தத்தின் விவரங்கள்:**
- **சிப்பம்–1 :**
  - ஒப்பந்த பணிகள் ரூ.2009 இலட்சத்திற்கு 18 மாதத்தில் முடிக்க M/s. Keyem Engineering Enterprises Ltd-க்கு கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- **சிப்பம்–2:**
  - ஒப்பந்த பணிகள் ரூ.1895 இலட்சத்திற்கு 18 மாதத்தில் முடிக்க M/s. Keyem Engineering Enterprises Ltd–க்கு கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- **பணிகளின் தற்போதைய நிலை**

1) தற்போது பணிகள் 17.08.2020 அன்று துவங்கப்பட்டுள்ளது.
2) இதுவரை 54.00 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது.
3) இத்திட்டத்திற்கு ரூ.1801.0 இலட்சம் நிதி இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

4) இத்திட்டப் பணிகள் அனைத்தும் நவம்பர் 2022 ல் முடிக்கப்படும்.
5) இத்திட்டம் நிறைவேறியவுடன் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதிக்கு தேவையான 18.18 மில்லியன் லிட்டர் குடிநீர், நெமிலியில் அமைந்துள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தின் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 1,16,500 மக்கள் பயன் பெறுவார்கள்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater https://cmwssb.tn.gov.in